செ.வெ.எண்:584 மார்ச் / 2019 நாள்:21.03.2019

**திருச்சிராப்பள்ளி மாவட்டம் (கிழக்கு), (மேற்கு) சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் பறக்கும் படையினர் இன்று 21.03.2019 வாகன தணிக்கையில் ஈடுபட்ட போது உரிய ஆவணங்கள் இல்லாமல் எடுத்து செல்லப்பட்ட ரூபாய் 8,09,000 பறக்கும் படையினரால் கைப்பற்றப்பட்டது என மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

இந்திய தேர்தல் ஆணையம் பாராளுமன்ற பொதுத்தேர்தல் - 2019 அறிவித்துள்ளது. கடந்த 10.03.2019 முதல் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளது. அதன்படி திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் கண்காணிப்பதற்கு பறக்கும் படை நியமிக்கப்பட்டு 24 மணி நேரமும் சுழற்சி முறையில் கண்காணித்து வருகின்றனர்.

21.03.2019 இன்று திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்ற தொகுதியில் பறக்கும் படை ஏ பிரிவு குழுத்தலைவர் மற்றும் வட்டாட்சியர் திருமதி ஸ்ரீ.மோகனா அவர்கள் தலைமையில், திருச்சிராப்பள்ளி ஏர்போர்ட் ரோட்டில் வாகனத் தணிக்கையில் ஈடுபட்ட போது TN. 20 CP 6644 Yamaha எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் உரிய ஆவணங்கள் இல்லாமல் எடுத்துச் செல்லப்பட்ட ரூபாய் 4,55,500, 1/196 குறிஞ்சிநகர், கோதைமங்கலம் பழனி என்ற முகவரியில் உள்ள திரு.மூர்த்தி த/பெ.முருகன் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. உரிய ஆவணங்கள் காண்பிக்கப்படாததால், பறிமுதல் செய்யப்பட்ட பணம், கருவூல அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மேற்கு சட்டமன்ற தொகுதியில் பறக்கும் படை பி பிரிவு குழத்தலைவர் மற்றும் புள்ளிஇயல் அலுவலர் திருமதி.எம்.வாசுகி அவர்கள் தலைமையில், குழமணி ரோடு, சோதனை சாவடி அருகில் வாகனத் தணிக்கையில் ஈடுபட்ட போது TN. 45 BM 3054 எண் கொண்ட வாகனத்தில் உரிய ஆவணங்கள் இல்லாமல் எடுத்துச் செல்லப்பட்ட ரூபாய் 3,53,500, திரு.ஏ.ஆர்.செந்தில்குமார் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. உரிய ஆவணங்கள் காண்பிக்கப்படாததால், பறிமுதல் செய்யப்பட்ட பணம், திருச்சிராப்பள்ளி சார்நிலை கருவூல அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**செய்தி வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**